<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். **145/2023**

இன்று 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : செந்தில்குமார்

தந்தை பெயர் : மகேந்திரன்

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கடந்த 19.06.1974 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு சான்று நகல் வா.சா.ஆ.**1** ஆகும். கடந்த 14.02.2007 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.**2** ஆகும். நிலஉடமை பதிவேட்டின் அசல் வா.சா.ஆ.**3** ஆகும். கடந்த 10.08.2023 ம் தேதியிட்ட பட்டா எண் 2566 ன் கணினி நகல் வா.சா.ஆ.**4** ஆகும். கடந்த 10.08.2023 ம் தேதியிட்ட பட்டா எண் 3239 ன் கணினி நகல் வா.சா.ஆ.**5** ஆகும். கடந்த 14.02.2007 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி சான்று நகல் வா.சா.ஆ.**6** ஆகும். கடந்த 27.03.2013 ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் கணினி சான்று நகல் வா.சா.ஆ.**7** ஆகும். கடந்த 29.02.2016 ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் கணினி சான்று நகல் வா.சா.ஆ.**8** ஆகும். கடந்த 27.01.2022 ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் கணினி சான்று நகல் வா.சா.ஆ.**9** ஆகும். மின் கட்டண அட்டை வா.சா.ஆ.**10** ஆகும். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் வா.சா.ஆ.**11** ஆகும். கடந்த 02.08.2023 ம் தேதியிட்ட புகாரின்

நகல் வா.சா.ஆ.12 ஆகும். மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை அனுமதித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/–T.Praveenkumar
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.